<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.6<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சிவராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.10.2024

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது தாராபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிநது வருகிறேன். இதற்கு முன்பு அமராவதி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 15.07.2022ம் தேதி 14.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது உடுமலைப்பேட்டை திருமூர்த்தி மகன் சிவக்குமர் நிலையம் ஆஜராகி கொடுதத புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய் குற்ற 54/2022 ச/பி 279,304(எ) 294(பி),506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புகாரில் அசலையும் முதல் தகவல் அறிக்கை அசலையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து மேல் விசாரணைகாக காவல் ஆய்வாளரில் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. புகார் கொடுக்க எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தார்கள் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு அரை மணி நேரம்

முன்பு வந்தார். புகார் எங்கு எழுதப்பட்டது என்ற தெரியாது என்றால் சரிதான்ள. இறந்த போன கீதா என்ற நபருக்கு தெரிந்தவர் தான் புகார்தாரர் என்றால் சரிதான். புகாரில் முதல் பக்கத்தில் மேல்புறம் என்ற இடைச் சொல் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு மருத்துவமனையில் அனுமதித்து பின்னிட்டு கணவருக்கு தகவல் சொல்லிவிட்டு அதன் பின்னிட்டு காவல் நிலையம் வந்ததாக உள்ளது என்றால் ஆமாம். ஆலாம்பாளையத்தில் இருந்த அரசு மருத்துவமனை செல்ல அரை மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். மேற்படி சொட்லலப்பட்டவை முடிக்க அரை மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். மருத்துவமனையில் அவர் 20 நிமிடம் இருந்திருப்பார் என்றால் வாய்ப்பு உண்டு. உடுமலையிலிருந்து அமராவதி செல்ல அரை மணி நேரம் ஆகுழும் என்றால் சரிதான். அப்படியானால் ஒரு மணி நேரத்திற்கு புகாரை அளித்திருக்க வாய்ப்பில்லை என்றால் வாய்ப்புண்டு. உங்களது சாட்சியத்தில் படி சம்பவ இடத்திலிருந்த காவல் நிலையத்திற்கு அரை மணி நேரத்தில் வந்து விட்டாகர்கள் என்றால் சரிதான்.

2. இறந்த நபர் ேஹாம்கார்டு என்றால் சரிதான். புகாரில் குற்ற எண் குறபிப்பிடவி்லை என்றால் அவசரத்தில் போடவில்லை, ,506(2) என்பதற்கு பதிலாக 306 க்கு போடப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்த போன நபர் ேஹாம்கார்டு என்பதால் பொய்யான புகாரினை பெற்று சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.